திருச்சியில் கழக முதன்மைச் செயலாளரும் மேற்கு சட்டமன்றத் தொகுதி வேட்பாளருமான கே.என்.நேரு அவர்கள் மேற்கு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட இடங்களில் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார். அவருடன் மாநகரச் செயலாளர் மேயர் அன்பழகன் மாவட்ட துணை செயலாளர் முத்துச்செல்வம், விஜய், ஜெயராஜ், ராஜா மலை, விஜய், விஜய் மற்றும் கழக நிர்வாகிகள், டோல்கேட் சுப்பிரமணி, ராமதாஸ், அருமைராஜ், மோகன்தாஸ், கிராப்பட்டி செல்வம், தொ.மு.ச. மாவட்ட அமைப்பாளர் குணசேகர், சோழன், சம்பத் , பழனி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

சூலூர் கண்ணம்பாளையம் தியாகிகள் கலையரங்கத்தில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சிகளின் சார்பில் சூலூர் சட்டமன்றத் தொகுதியில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் சார்பில் போட்டியிடும் கழக வேட்பாளர், கோவை தெற்கு மாவட்டக் கழக செயலாளர் தளபதி முருகேசனை ஆதரித்து நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் ஒன்றிய முன்னாள் நிதி அமைச்சர், மாநிலங்களவை உறுப்பினர் ப.சிதம்பரம் உரையாற்றினார். இதில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் தோழமைக் கட்சி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டனர்.

புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் சட்டமன்றத் தொகுதி பொன்னமராவதி தெற்கு ஒன்றியம் ஆலவயல் ஊராட்சியில் மதச்சார்பற்ற ஜனநாயக முற்போக்குக் கூட்டணி திருமயம் சட்டமன்றத் தொகுதி வெற்றி வேட்பாளர் , அமைச்சர் எஸ். ரகுபதி அவர்களுக்கு ஆதரவாக தமிழர் தேசம் கட்சி தலைவர் கே.கே. செல்வகுமார் திறலான பொது மக்கள் மத்தியில் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு கேட்டு பிரச்சாரம் செய்தார்.

புதுக்கோட்டை சட்டமன்றத் தொகுதி மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 01, 04 ஆகிய இரண்டு வார்டு பகுதிகளை உள்ளடக்கிய பகுதிகளில் புதுக்கோட்டை. சட்டமன்றத் தொகுதி கழக வெற்றி வேட்பாளர் டாக்டர் வை.முத்துராஜா பொதுமக்களை நேரில் சந்தித்து வாக்கு சேகரித்தார். இந்நிகழ்வின்போது முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர் வி.ஆர்.கார்த்திக் தொண்டைமான், தெற்கு மாநகர கழக பொறுப்பாளர் வே.ராஜேஷ் , கழக மூத்த முன்னோடிகள், கழக நிர்வாகிகள் மற்றும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகளும், மாமன்ற உறுப்பினர்களும், வட்டக் கழகச் செயலாளர்களும்,, கழக நிர்வாகிகள் பலரும் கலந்து கொண்டனர்.

களத்தில் இளைஞர் அணி

மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து, கழக இளைஞர் அணி நிர்வாகிகள் வீடு வீடாகச் சென்று, வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டபோது எடுக்கப்பட்ட புகைப்படங்களின் தொகுப்பு.

திருப்பூர் தெற்கு சட்டமன்றத் தொகுதி,
திருப்பூர் மத்திய மாவட்டம்

பவானிசாகர் சட்டமன்றத் தொகுதி,
ஈரோடு வடக்கு மாவட்டம்.

பழனி சட்டமன்றத் தொகுதி,
திண்டுக்கல் கிழக்கு மாவட்டம்.

பத்மநாபபுரம் சட்டமன்றத் தொகுதி,
கன்னியாகுமரி மேற்கு மாவட்டம்.

போடிநாயக்கனூர் சட்டமன்றத் தொகுதி,
தேனி வடக்கு மாவட்டம்

ஓமலூர் சட்டமன்றத் தொகுதி,
சேலம் மத்திய மாவட்டம்.

திருவரங்கம் சட்டமன்றத் தொகுதி,
திருச்சி மத்திய மாவட்டம்.

ஒரத்தநாடு சட்டமன்றத் தொகுதி,
தஞ்சாவூர் மத்திய மாவட்டம்.

மாதவரம் சட்டமன்றத் தொகுதி,
சென்னை வடகிழக்கு மாவட்டம்